# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## O.S.No. 108/2020

சாட்சி : PW– 1
பெயர் : திருமதி. கற்பகம் தேதி : 15.09.2025

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்குவிசாரணை**:– ( பிரதிவாதிகள் தரப்பில்)

2ம் வாதி எனது சகோதரி ஆவார். 3ம் வாதி எனது தாயார் ஆவார். 1ம் பிரதிவாதி எனது சகோதரர் ஆவார். 2 மற்றும் 3 பிரதிவாதிகள் அவர்களது பிள்ளைகள் ஆவார். வழக்கு தாக்கல் செய்யும் போது 1ம் பிரதிவாதி பெயரில் மட்டும் தான் இவ்வழக்கை தாக்கல் செய்தோம். பின்னிட்டு தான் 2 மற்றும 3 பிரதிவாதிகள் இவ்வழக்கில் சேர்க்கப்பட்டார்கள் என்றால் சரிதான். இவ்வழக்கு சொத்துகள் என் தகப்பனாரின் சொத்துகள் என்றும், அதனால் வழக்கு சொத்துகளில் பாகம் கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம். தாவா முதல் அயிட்ட சொத்து 4 ½ சென்ட் காலிஇடமாகும், இது பூலாம்பட்டி ரோட்டிற்கு வடபுறம் உத்தண்டி காடு என்ற இடத்தில் உள்ளது என்றால் சரிதான். 2ம் அயிட்ட சொத்து பூலாம்பட்டி ரோட்டிற்கு தென்புறத்திற்கு உள்ளது என்றால் அது 10 சென்ட் நிலமாகும். 3 வது அயிட்ட சொத்து மேற்படி 2ம் அயிட்ட சொத்திற்கு மேற்கு புறத்தில் உள்ள 16 சென்ட் சொத்தாகும். மேற்படி சொத்துகளை என் தகப்பனார் கிரயம் பெறும்போது காலி இடமாகதான் வாங்கினார். தற்போதும் முதல் அயிட்ட சொத்து காலியிடமாக உள்ளது என்றால் சரிதான். 2 மற்றும் 3 ம் அயிட்ட சொத்துகளில் கட்டிடம் உள்ளது என்றால் சரிதான். 2ம் அயிட்ட சொத்தான 10 சென்ட் நிலத்தின் வடபுறம் ஒரு வில்லை வீடு 1985 ம் ஆண்டு கட்டப்பட்டது. மேற்படி கட்டிடத்தில் மேற்குபகுதியை த றியாகவும்,

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem

கிழக்கு பகுதியை குடியிருப்பாகவும் பயன்படுத்தி வந்தார்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி 1986 ம் ஆண்டில் அவரது பள்ளிபடிப்பை முடித்துவிட்டார் என்றால் அது எனக்கு தெரியவில்லை. 1ம் பிரதிவாதி மேற்படிப்பு படிக்க செல்வதாக கேட்டார் என்றும், ஆனால் என் தகப்பனார் தறிகளை பார்த்து கொள்ளும்படி சொன்னார் என்றும் சொன்னால் சரிதான். என் தகப்பனார் எடப்பாடி கைத்தறி சொசைட்டியில் சாயமேற்பார்வையாளராக பணிபுரிந்து வந்தார். 2003 ம் ஆண்டில் என் தகப்பனார் விருப்ப ஓய்வு பெற்றுவிட்டார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு 1997 ம் ஆண்டில் திருமணம் ஆனது என்றால் அது எனக்கு தெரியாது. எனது தங்கையின் திருமணத்திற்கு முன்பாகவே தாவா 2 ம் அயிட்ட சொத்தில் தென்புறமுள்ள 5 சென்ட் நிலத்தில் ஒரு தார்சு வீடு கட்டப்பட்டுள்ளது. வில்லை வீட்டில் முதலில் 4 தறிகள் இருந்தது என்றால் சரிதான். பின்னிட்டு என் தகப்பனார் அதனை 10 தறிகளாக உயர்த்தினார். எனது சகோதரரான 1– ம் பிரதிவாதிதான் அதனை விரிவு படுத்தினார் என்றால் சரியல்ல. தார்சு கட்டிடத்தில் தரைதளத்தில் 11 தறிகள் உள்ளது என்றால் சரிதான். முதல் தளத்தில் 1ம் பிரதிவாதியும் அவரது வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி வில்லை வீடு மற்றும தார்சு வீடு ஆகியவை ஒரே காம்பவுண்டிற்குள் தான் உள்ளது என்றால் சரிதான் தார்சு வீட்டிற்கான படியும் வில்லை வீட்டை ஒட்டி அதனுடன் சேர்த்துதான் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டு வீட்டிற்கும் சேர்த்து பொதுவான தண்ணீர் தொட்டிதான் உள்ளது என்றால் சரிதான். அது என் தகப்பனார் காலத்திலிருந்து என் தகப்பனார் பெயரில் தான் உள்ளது. என் தாயார் மேற்படி வில்லை வீட்டில்தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். தாவா 3ம் அயிட்ட சொத்தில் சாயப்பட்டறை உள்ளது. எனது சகோதரர் தான் மேற்படி சாயப்பட்டறை மற்றும் தறிகளை நிர்வாகம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. என் தகப்பனார் 2018 ம் ஆண்டில் இறந்துவிட்டார். 2ம்

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem

பிரதிவாதி ஒரு மாற்றுதிறனாளி என்றால் சரிதான். என் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் என் பெயருக்கும், சகோதரி பெயருக்கும் 2000ம் ஆண்டில் ஒருஉயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். என் தகப்பனார் 2000ம் ஆண்டில் மேற்படி உயிலை எழுதியிருந்தார் என்றும், அதனை 2007 ம் ஆண்டில் ரத்து செய்துவிட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. நாங்கள் சார்பதிவாளர் அலுவலத்தில் பார்த்தோம், அதுபோன்ற உயில் எதுவும் இல்லை. எங்களுக்கு எழுதிவைத்த உயிலில் எனது சகோதரருக்கு வேறு சொத்துகள் அவரால் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், அதனால் இந்த உயிலை எனக்கும் எனது சகோதரி பெயருக்கும் எழுதுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது திருமணத்தின்போதே எனக்கு போதுமான சீர்வரிசைகள் செய்து திருமணம் செய்து வைத்துவிட்டார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகளில் எனது சகோரர்தான் தொழிலை அபிவிருத்தி செய்தார் என்றும், எனது சகோதரைர் நிர்வாகத்தில் தான் எங்களது தறி மற்றும் சாயப்பட்டறை இருந்து வந்தது என்றும, அதனால் என் தகப்பனார் 2 மற்றும் 3ம் பிரதிவாதிகளுக்கு 10.05.2017 ல் ஒரு உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் சரியல்ல. பாலசுப்ரமணி என்பவர் 1ம் பிரதிவாதிக்கு நெருக்கமான உறவினர் ஆவார். பாலசுப்ரமணி என் தாயாருக்கு பங்காளி உறவினர் ஆவார். என் தகப்பனார் உயிலை பாலசுப்ரமணியிடம்தான் கொடுதது வைத்திருந்தார் என்றால் சரியல்ல. என் தகப்பனார் உயிலே எழுதவில்லை. கிருஷ்ணனன் மகன் சுந்தரம் என்பவர் என் தகப்பனார் வழி உறவினர் என்றால் சரியல்ல. மேற்படி உயிலில் இவர்கள் இருவரும்தான் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளார்கள் என்றும், மேற்படி வழக்கு சொத்துகளின் மூல ஆவணங்களின் அசலையும், உயிலின் அசலையும் மேற்படி பாலசுப்ரமணியிடம்தான் என் தகப்பனார் கொடுத்து வைத்திருந்தார் என்றால் சரியல்ல. என் தகப்பனார் ஆங்கிலத்தில்தான்

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem

கையொப்பம் செய்வது வழக்கம் என்றால் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் செய்வார். என் தகப்பனார் ஆங்கிலத்தில்தான் கையொப்பம் போடுவார் என்றும் தமிழிலும் கையொப்பம் செய்வார் என்றும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா 2ம் அயிட்ட சொத்தில் உள்ள வில்லை வீடு மற்றும் அது அமைந்துள்ள 5 சென்ட் நிலத்தை என் தகப்பனார் என் தாயார் பெயருக்கு தானம் எழுதி வைத்துள்ளார். அதனை என் தாயாரும், 1ம் பிரதிவாதியும் சேர்ந்து தான்அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. என் தாயார் மட்டும்தான் அனுபவித்து வருகிறார். மேற்படி வில்லை வீட்டின் மேற்குபுறம் தற்போது தறிசெயல்பட்டு வருகிறது என்றால் சரிதான். மேற்படி தறி அமைந்துள்ள பகுதியை 1ம் பிரதிவாதிதான் இன்றுவரை அனுபவித்து வருகிறார் என்றும், மேற்படி தான செட்டில்மென்ட் பத்திரம் நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனார் 2 மற்றும் 3ம் பிரதிவாதிகளுக்கு 10.05.2017ல் எழுதி வைத்துள்ள உயில் நடைமுறைக்கு வந்துவிட்டது என்றும் உயில்படி தான் சொத்துகள் அனுபவிக்கப்பட்டு வருகிறது என்றும், எனவே அதனடிப்படையில்தான் பாகப்பிரிவினை செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. நாங்கள் இவ்வழக்கில் தவறான சங்கதிகளை குறிப்பிட்டுள்ளோம் என்றும், எனவே எங்கள் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem